**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பண்ருட்டி.**

**முதலேற்பு வழக்கு எண். 3/2015**

**2025 ம் ஆண்டு அக்டோபர்-07 ம் நாள் செவ்வாய்கிழமை**

| | |
|---|---|
| பெயர் | : பரந்தாமன் |
| சாட்சி | : PW1 |
| தந்தை பெயர் | : சின்னதம்பி |
| வயது | : 68 |

**கடந்த 11.09.2025 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

8. வழக்கு முழு சொத்தும் எனது தந்தையின் பாகத்தில் கிடைக்கவில்லை என்று பிரதிவாதி கூறியுள்ளார் என்றால் எனது தந்தை எனக்கு என்ன கூறினாரோ அது மட்டும் தான் எனக்கு தெரியும். எனது தந்தையின் சொத்து எனக்கு தான் பாத்தியப்பட்ட சொத்து ஆகும். எனது தந்தைக்கு பாத்தியப்படாத சொத்தில் எனக்கு பாகம் எழுதி கொடுக்க முடியாது என்றால் சரியல்ல. எனது தந்தையின் சொத்து எனக்கு தான் பாத்தியம் . வழக்கு சொத்திதல் கீழ்புறம் உள்ள 11 ஏர்ஸ் மட்டும் தான் எனக்கு சொந்தம் என்றால் எனது தந்தை 55 செண்ட் எழுதிவைத்துள்ளார் 55 செண்டும் எனக்கு தான் உரிமை உள்ளது. வழக்கு சொத்தின் பட்டா எனது தந்தையின் பெயரில் உள்ளதாக கூறியுள்ளேன் அந்த பட்டா செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல.

வேல்முருகன் செண்ட்ரல் பேங்க் வங்கியில் சொத்தை அடமானம் வைத்து கடன் வாங்கியுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்தின் மேற்கு புறம் கிருஷ்ணனின் சொத்து அமைந்துள்ளது என்றால் முதலில் சாட்சி சரிதான் என்று கூறிவிட்டு பிறது சாட்சி என்னுடைய சொத்திற்கு மேற்கு புறம் கிருஷ்ணினின் சொத்து அமைந்துள்ளது என்று கூறினார். பிரதிவாதியின் சொத்திற்கு வடபுறம் ரோடு அமைந்துள்ளது என்றால் ரோடு அமைந்துள்ளது. ஆனால் அது என்னுடைய இடத்தில் அமைந்துள்ளது.

பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்திற்கு கிழபுறம் எனது தாயாரின் சொத்து அமைந்துள்ளது என்றால் பிரதிவாதிக்கு தாவா சொத்திற்கு அருகில் இடமே இல்லை. எனது தாயாரும் யாருக்கும் விற்பனை செய்யவில்லை. நான் வங்கியில் மட்டும்

அடமானம் வைத்து இருந்தேன். அடமானம் பிரதிவாதியின் சொத்திற்கு தென்புறம் கிருஷ்ணன் நிலமும் ஆதிமூலத்தின் நிலமும் உள்ளது என்றால் சரியல்ல என்னுடைய நிலம் தான் உள்ளது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கு சொத்திற்கு வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த வில்லங்க சான்றிதழில் வேல்முருகன் மற்றும் அன்பழகன் கிரையம் பெற்ற விவரம் உள்ளது என்றால் இல்லை. நான் பார்த்தாக கூறும் வில்லங்க சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் என் பிள்ளைக்கு தான் தெரியும். இந்த வழக்கை பற்றி எதுவும் எனக்கு தெரியாது என்றாலும் எனது மகன் மோகன கண்ணனுக்கு தான் தெரியும் என்றால் சரிதான்.

வழக்கின் விவரம் அனைத்தும் வழக்கறிஞரிடம் நானும் எனது மகனும் சேர்ந்து தான் தெரிவித்தோம். வழக்கில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பொய்யான விவரங்களை கூறி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இத்துடன் முடிக்கப்பட்டது.**